8th November 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There was no fire accident in any petrol tank in the Industrial Colony, Madurai.

On 6th June 1965 a fire accident took place at a Super 'B' type unit in the above Industrial Colony, resulting in the death of two workers.

(b) The accident was caused on a weekly holiday when the workers attended to the maintenance works in the gas plant of the factory. Two persons died in the hospital due to burns. Two more persons who were injured survived.

திரு. கரு. சீமைச்சாமி : இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுக்கு எல்லாம் 'எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் ஆக்ட்' பொருந்தும். அந்த ஆக்ட் பிரகாரம் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

Southern States' Police

* 345 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any proposal has been received for introducing a common training programme for the Police in the Southern States; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) Proposals are awaited from the Inspector-General of Police.

(அ) & (இ) : போலீஸ் துறைத் தலைவரிடமிருந்து செயற் குறிப்புகளை எதிர்பார்க்கிறோம்.

* 346 கேள்வி—**திரு. து. ப. அழகமுத்து** : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) போலீஸ் இலாகாவில் பணியாற்றுவோருடைய சம்பள விகிதங்களை மாற்றியமைப்பது பற்றி அண்மையில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடமிருந்து அரசாங்கத்திற்கு கோரிக்கை வந்துள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

களம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த விஷயம் குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்வதாகக் கூறினார்கள். எப்போது முடிவு எடுக்கப்படும் ? காலதாமதம் இல்லாமல் சீக்கிரம் முடிவு எடுக்கப்படுமா ?